OS. 39/2014

**நாள். 20.10.2022.**

**வா.சா. 1 –** வீரபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்....

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

முத்து வெயிலு சேர்வையின் சகோதரர் பெருமாள் சேர்வை எந்த வருடம் இறந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. பெருமாள் சேர்வையின் பேத்தி தான் எனது தாயார் வெயிலம்மாள் என்றால் சரிதான். என் தாயார் வெயிலம்மாள் 2014ம் ஆண்டு இறந்தார். எனது தகப்பனார் சிவஞானம் 1987 ல் இறந்தார். 25.03.1960 ல் எழுதப்பட்ட உயிலைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆதியில் தாவா சொத்துக்கள் வேலுபண்டிதர் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. எந்த பட்டாவும் கிடையாது. ஆதியில் வேலு பண்டிதர் பெயரில் தான் பட்டா இருந்தது என்றும் வழக்கிற்காக நான் பட்டா இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வேலு பண்டிதர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. வேலு பண்டிதர் இறப்பிற்கு பின்னர் ரெங்கசாமி தான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்துவந்தார் என்றால் சரிதான். ரெங்கசாமி பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரெங்கசாமி பண்டிதர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. ரெங்க சாமி பண்டிதர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்தோம். ரெங்க சாமி எங்களிடம் ஒப்படைத்துவிட்டார். ரெங்க சாமி பண்டிதர் எங்களிடம் தாவா சொத்துக்களை ஒப்படைத்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நேரடியாகத்தான் ஒப்படைத்தார். ரெங்க சாமி பண்டிதர் எங்களிடம் சொத்துக்களை நேரடியாக ஒப்படைக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை ரெங்க சாமி பண்டிதர் 1973 அல்லது 1974 ல் ஒப்படைத்ததாக என் தாயார் சொன்னார். தாவா சொத்துக்களை ரெங்க சாமி பண்டிதர் 1973 அல்லது 1974 ல் ஒப்படைத்ததாக என் தாயார் சொன்னார் என்ற விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். தாவா சொத்தை பொருத்து முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 3ம்பிரதிவாதிக்கு எதிராக OS.No.124/2004 என்ற வழக்கினை நானும், எனது பெரியப்பா மகன் விஸ்வநாதன், நந்தி, முருகம்மாள் மற்றும் காமாட்சி ஆகியோர் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் ஏற்படுத்திய கூட்டுப்பட்டா செல்லாது என்று உத்தரவு ஏற்பட்டு 26.07.2005 அன்று வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்தோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. OS.No.124/2004 என்ற வழக்கை பற்றி பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா ரத்தாகி 3ம் பிரதிவாதி பெயரில் பட்டாவாகி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. OS.No.176/1978 என்ற வழக்கில் வெள்ளைச்சாமி என்பவர் 2ம் வாதியாக இருந்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பினை நிறைவேற்றுவதற்காக EP.No.37/1978 என்ற மனு தாக்கல் செய்து அதில் வெள்ளைச்சாமி ஒப்படைப்பு பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. ரெங்க சாமி பண்டிதரின் வாரிசுகள் 1ம்பிரதிவாதிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்து அதன்படி 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 2003ம் வருடமே கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2003ம் ஆண்டில் கிரயம் கொடுத்தது சம்மந்தமாக நான் இடையூறு செய்ததால் என் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்து 4, 5 ம் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அவர்களிடம் தான் அனுபவம் உள்ளது என்றும் பட்டாவும் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். நான் சொல்வதுபோல எந்த அனுபவம் செய்யவில்லை என்றும் தாவா சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகளால் கிரயம் பெறப்பட்டு அவர்களுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும் அது சம்மந்தமாக நானே OS.No.124/2004 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை மறைத்து பிரதிவாதிகளுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

(5ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்திருப்பதை 1ம் பிரதிவாதி மேற்கொண்டு ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.)

(5ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்திருப்பதை 15ம் பிரதிவாதியின் நீதிமன்ற காப்பாளர் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்)

<u>மறுவிசாரணை</u> – இல்லை.